
# தெய்வமும்





# தீந்தமிழும்

தீவகம். வே. இராசலிங்கம்

வெளியீடு: பாரதி பதிப்பகம் - கனடா

# தெய்வமும் தீந்தமிழும்!

இரு பகுதிகள்
1-தெய்வம் நாற்பது
2-தீந்தமிழ் நாற்பது

வெளியீடு:
பாரதிவயல் பதிப்பகம்
தை-2013

# நூலின் விபர அட்டவணை

நூலின் பெயர்: தெய்வமும் தீந்தமிழும்

நூலாசிரியர்: தீவகம். வே. இராசலிங்கம்

வெளியீடு: பாரதிவயல் பதிப்பகம்.

முதற்பதிப்பு: ஐப்பசி-2013

தட்டச்சு: தீவகன்.
வடிவமைப்பு: தீவகன்.
அட்டைப்படம்: தீவகன்.

பதிப்புரிமை: நூலாசிரியருக்கே.

Name of the Book: THEIVAMUM THEENTH THAMILUM

**Author:** **Thee.Ve.Rajalingam**

G.C.E(O.L/A.L) English Medium, Dip. in. Web.Design

**Language:** **Tamil**

**First Edition:** **January (THAI) 2013**

**Type Setting, Design and**
**Front Cover Page:** **Theevagan.**

**Number of Copies:** **500.**

**Copy Right:** **Author.**

# பார்வை

கலாநிதி எஸ்.சிவநாயகமூர்த்தி அவர்கள்.

புதியபாரதி. இராசலிங்கம் அவர்களின் "தெய்வமும் தீந்தமிழும்" என்னும் இந்நூல் பல தெய்வங்களையும், பல ஆலயங்களையும், தாயகத்தையும், தாய்மொழியாம் தமிழையும் வியந்து பக்தியோடு பாடிய ஐம்பதுக்கும் மேற்பட்ட கீர்த்தனைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இவையாவும், தெய்வங்களைத் துதித்த பொழுது அவர்மனதில் எழுந்த தெய்வ உணர்வுகளைப் பிரதிபலிக்கும் கீர்த்தனைகளாகும்.

புதியபாரதி அவர்கள் சிறப்பாக விநாயகர், சிவன், துர்க்கை அம்மன், முருகன், ஐயப்பன் ஆகிய தெய்வங்கள் குடிகொண்டுள்ள தாயக ஆலயங்கள் சிலவற்றையும், கனடாவில் குடி கொண்டுள்ள ஆலயங்களையும் விழித்து, அங்குள்ள தெய்வங்களின் சிறப்புக்களையும், தாயகம், தமிழ் என்பவற்றின் பெருமையையும் உருக்கமாகவும் உணர்வோடும் பாடியுள்ளார்.

இக்கீர்த்தனைகள் கனடாவிலுள்ள தெய்வங்களை மட்டுமன்றித், தாயகத்தில் கோவில் கொண்டருளியிருக்கும் தெய்வங்களையும் நினைந்து பாடியுள்ளமை அவரின் பக்தி வைராக்கியத்தையும், தாயகப் பற்றையும் எடுத்துக் காட்டுகிறது. இவரின் தாயகம் பற்றிய "தெய்வமெல்லாம் பாடிநின்றேன், குக்கூ குக்கூ குயிலக்கா, வந்துவிடு வந்துவிடு, நல்லமணி வந்துவிழ என்ற கீர்த்தனைகளும், என்னுயிரில் நெஞ்சமிட்ட இன்பத் தமிழே, தேன்தமிழே தித்திக்கும் கனியமுதே, எம்மொழியே செம்மொழியே, தமிழவள் எந்தன் பராசக்தி என்ற கீர்த்தனைகளும் படிப்போர் மனதை உருக்குவனவாக உள்ளன.

இவரின் கீர்த்தனைகள், எல்லோரும் விளங்கிக் கொள்ளக் கூடிய முறையில், இலகு தமிழில் பாடியுள்ளமை மேலும் சிறப்பை அளிக்கிறது. இவற்றின் எதுகை மோனைகளும் உட்கருத்துக்களும் படிப்போர் மனதில் ஒரு எழுச்சியையும், உள்ளத்திலே பக்தியையும் வளர்ப்பனவாகவுள்ளன. இக்கீர்த்தனைகளை மன அமைதியாக உள்ளுணர்வோடு பாடுபவர்களுக்கு அவற்றின் ஆழமான ஆன்மீகக கருத்துக்கள் மனத்திற்கு அமைதியையும், தெய்வ பக்தியையும் ஏற்படுத்தக் கூடியனவாக அமைந்துள்ளன.

இவற்றுக்கு இசைக்கலைஞர்கள் வாத்திய இசையமைத்துப் பாடுவார்களாயின் அவற்றின் மகிமையும், இனிமையும் வெகு சிறப்புடன் விளங்குமென்பதில் ஐயமில்லை. கவிஞர் புதியபாரதி முன்னரும் பல கவிதைகளை நூலுருவில் வெளியிட்டுப் பெருமைபெற்றவர். அவரின் இப்பக்திமயமான கீர்த்தனைகள் அவரின் அருமையான ஆன்மீகப்பணியாகும். அவரின் கவித்திறன் மேலும் வளரவும் நலம் பெற்று நீடு வாழவும் வாழ்த்துகின்றேன்.

கலாநிதி. எஸ்.சிவநாயகமூர்த்தி

# மனவுரை

தெய்வமும் தீந்தமிழும் என்ற இந்த நூலின் முதற் பகுதியான தெய்வம் என்ற தலைப்புக்கானது இந்த மனவுரைப் பக்கம்.

கவிதைக்குத் தடாகமாகத் திகழ்வது பன்னிரு திருமுறைகள். தேவார திருமுறைகளைப் மனப்பாடம் செய்தாலே கவிதை தானாகவரும் என்று கவியரசர் கண்ணதாசன் மொழிந்தவை எவ்வளவு உண்மையானவை என்பது எனக்கு அனுபவமாகிக் கொண்டவை.

சொல்வளத்தை சமய இலக்கியங்களிலே தமிழகம் பதிந்து வைத்திருக்கிறது. திருவாசகத்திற்கு உருகாதார் ஒருவாசகத்திற்கும் உருகார் என்று உரைத்த, வீரமா முனிவர் என்ற ஜி,யூ.போப் என்னும் ஆங்கிலப் பாதிரியார், தமிழின்மேல் கொண்ட பற்றுதலால் கற்றறிந்த வர் ஆனார்.

**சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்**
**தமிழோடிசை பாடல் மறந்தறியேன்**

என்று பாடிய திருநாவுக்கரசர் கடவுளைத் தமிழால் அர்ச்சனை செய்த ஞானிகள் வரிசையால் முதன்மையானவர்.

சிறுவனாக இருந்தபொழுது திருவெம்பாவை எனக்கும், என்னைப்போன்ற பல சிறுவர்களுக்கும் பாடமானவை.

அதிகாலையில் எழுந்து குளித்துத் தியானித்து பல குழுக்களாகப் பிரிந்து எங்கள் கிராமத்தின் மூலை முடுக்கெல்லாம் பாடித் திரிந்து, பின்னர் உதயத்துக்கு முன் அனைவரும் பள்ளம்புலம் முருகன் ஆலயத்திற்குச் சென்று அங்கே திருவெம்பாவைப் பூசையில் கலந்து கொள்வோம்.

கூட்டுப் பிரார்த்தனை சபையை உருவாக்கி, நிர்வாகப் படுத்தி, கிராமத்துக்கு ஒளியூட்டியவர் ஆசிரியர் ச.மகாலிங்கம் அவர்கள்.

இந்தப் பிரார்த்தனையில் பங்குபற்றிய பல இளைஞர்கள், கல்வியில் சிறந்து விளங்கக் காரணமாகினர்,

கூட்டுப் பிரார்த்தனைகளின் பின்னணியில் வளர்ந்ததினால் தெய்வங்களைப் பிரார்த்திக்கும் வகைகளில் ஒன்றான கீர்த்தனைகளாக எழுதப்பட்டவைதான் இவைகள்.

பாபநாசம் சிவன், அ.மருதகாசி, இணுவில் வீரமணி ஐயர், கண்ணதாசன், இன்னும் பல தமிழகக் கவிஞர்களால் தெய்வகானங்கள் செழித்து வளர்ந்து கொண்டன.

கடவுள் வழிபாடுகளினால் தமிழ் தானாகவே வரும், வளரும். தமிழிசைக்குள் இந்தத் தெய்வகானங்களை யாரும் எடுத்துவரலாம். இசை வல்லுனர்களின் வண்ணங்களுக்கும் எண்ணங்களுக்கும் இந்தக் கீர்த்தனைகளை விட்டுவிடுகிறேன். தமிழ் வளர்க்கும் அனைவருக்கும் எனது நன்றிகள் உரித்தாகுக.

தீவகம். வே. இராசலிங்கம்

ரொறன்ரோ-கனடா-ஐப்பசி 21-2013

# தெய்வமும் தீந்தமிழும்!

## பகுதி:01
## தெய்வம் நாற்பது!

(01)

# வேவியூப் பிள்ளையாரே!

## பல்லவி

வேவியூப் பிள்ளையாரே விநாயகனே நானழைத்தேன்
சேவடியில் மலர்குவித்துச் தெள்ளுதமிழ்ப் பாத்தொடுத்தேன்
-வேவி

## அனுபல்லவி

பாவடிக்கும் சிற்பி எந்தன் பண்ணிசைக்குள் நீவிழுந்தால்
காவடிகள் தூக்கிநிற்கும் கனகமணித் தேசம் செய்வேன்
-வேவி

## சரணம்

மாவடியில் உனைப்பார்த்தேன்
மருதடியில் தேரிழுத்தேன்
மாமாங்க நீராட்டில்
மண்குளிரத் தீர்த்தமிட்டேன்
பூமலரப் போதவிழும்
பொன்கரத்தில் அங்குசமும்
சேவடிகள் பூத்துநிற்கத்
தேசமெங்கும் கோவில்கண்டேன் -வேவியூ

எண்ணத்தில் வீடமைத்தேன்
என்னிதயத் தீபமிட்டேன்
பொன்மகளை நீகொடுக்கப்
புதுமழலை முத்தெடுத்தேன்
கண்ணிமைக்குள் நிதமுறங்கும்
கரிமுகனே உந்தனைநான்
மண்ணிலெங்கும் கண்டேனையா
மனமுருகி நின்றேனையா! -வேவியூ

நீகொடுத்த தேசமண்ணில்
நிசமிழந்து போனதையா!
மானழுகுக் கன்னியரின்
வஞ்சிநிலம் சாகுதையா!
ஈனமது அறுவடையாய்
என்சாதி துவளுதையா!
ஆனைமுகா ஓங்காரா
அபயகரம் தாருமையா! -வேவியூ

(02)

# கற்பக விநாயகனே!

## எடுப்பு

கற்பக விநாயகனே-பிறம்ரன்
கற்பக விநாயகனே! -கற்பக..

## தொடுப்பு

அற்புதம் படைக்கும் அருள்நிறை வாசா
அங்குச பாசா ஆபத் பாந்தவா..! -கற்பக..

## முடிப்பு

கற்பனை இல்லை கதையிலும் இல்லை
கருணையைப் பொழியும் கணபதிப் பிள்ளை!
நிற்பதும் நடப்பதும் நிகழ்வதும் எல்லாம்
சொற்படி நடாத்தும் சுந்தரப் பிள்ளை..! -கற்பக

வேண்டுவார் வேண்டிநிற்கத் துன்ப
விக்கினங்கள் வேரறுக்க எங்கள்
மூண்டவலி வீழ்ந்துநிற்க வேத
விக்கினனே நீயருள்வாய்! -கற்பக..

(03)

# ஐங்கரா உன்னை..!

### பல்லவி

ஐங்கரா உன்னை என்கரம் கொண்டேன்
அகன்றிடக் கூடுமோ இனியே! -ஐங்கரா

### பல்லவி எடுப்பு

அஞ்சலென் றேநீ அபயம் அளிக்கின்ற
அருமருந் தானதோர் கனியே! -ஐங்கரா

### கண்ணிகள்

அங்குச பாசா எங்கும் வியாபகா
எங்களின் பூமி இலங்கும் விநாயகா
மன்புகற் கனடா மருங்கெலாம் முகிழ்த்தாய்
மருவடி யார்கள் மனமெலாம் உதித்தாய்! -ஐங்கரா

மருதடி நாயகா மாமாங்கச் சேவகா!
மண்ணெலாம் வரிக்கும் மாகரிக் காவலா!
முருகண்டி யானே முடிப்பிள்ளைத் தேனே!
முகிழ்க்கரம் தந்தால் மகிழ்ந்திடு வேனே! -ஐங்கரா

(04)

## பிறம்ரன் பிள்ளையாரப்பா..!

### பல்லவி

பிள்ளை யாரப்பா? -கற்பகப்
பிள்ளை யாரப்பா! -பிள்ளையாரப்பா

### பல்லவி எடுப்பு

உள்ளிருந்தே யென்னை ஊஞ்சலாய் ஆக்கிடும்
பிள்ளை யாரப்பா? -பிறம்ரன்
பிள்ளை யாரப்பா! -பிள்ளையாரப்பா

### கண்ணிகள்

நல்லகதி நீயருள்வாய் நாடுகதி தந்திடுவாய்!
நாதமென உச்சிமலை நம்பிநீ வந்திடுவாய்!
அல்லலுறும் மாந்தருக்கு இல்லைபயம் என்றிடுவாய்!
அற்புதா! கற்பகா! ஆனைமுகா அருள்நேசா...!
-பிள்ளையாரப்பா

ஆலமரம் அடியிருப்பாய் அரசமரம் குடியிருப்பாய்!
அண்டிவரும் அடியவர்க்கு அருகம்புல் லாயிருப்பாய்!
காலமகள் மடியினிலே கரிமுகனாய் வீற்றிருப்பாய்!
கைலாசப் பிள்ளையே காக்கைபதி உறைபவனே..
-பிள்ளையாரப்பா

(05)

# பிள்ளையாரே துள்ளிவா..!

துள்ளிவா துள்ளிவா துள்ளிவா துள்ளிவா
தும்பிக்கை வீசியே துள்ளிவா துள்ளிவா ! -துள்ளிவா

அள்ளிவா அள்ளிவா அன்பருக்கு நல்லவா!
ஆடற்கலை பாடமெலாம் அகரம்போல் ஆனவா! -துள்ளிவா

சித்திபுத்தி நாயகா சித்திதரும் தூயவா
முத்திதரும் மோனவா முதல்வணக்க மானவா! -துள்ளிவா

விபீசர்க் கருளிடவே விமானம் இழுத்தவா!
அபிசேட நர்த்தனா ஆனந்தக் கீர்த்தனா! -துள்ளவா

திருச்சிமலைப் பிள்ளையே மருதடியின் கிள்ளையே
முருகனுக்கு அண்ணனே ஞானப்பழ மன்னனே! -துள்ளிவா

எலிவாக னத்திலே எழுந்தருளும் நாயகா
கலியுகத்துத் தெய்வமே காத்தருளும் தூயவா! -துள்ளிவா

விசயனுக்கு நாதனே வித்துவத்துப் போதனே
அசையாமல் வீற்றிருந்து அசையவைக்கும் நேசனே.!
-துள்ளிவா..

(06)

# ஓங்கார நாயகா..!

### பல்லவி

ஓங்கார நாயகா ஓடுமெலி வாகனா..
ரீங்காரப் பஜனையிலே நின்றாடுந் தூயவா! -ஓங்கார

### பல்லவி எடுப்பு

ஆங்காரம் கொண்டமனம் ஆணவத்தைப் போக்கிவிட
ஓங்காரம் இசைத்துவரும் ஒருதந்தத் தாலெழுதும் -ஓங்கார

### கண்ணிகள்

துன்பமே சூழ்ந்திடும் துயரங்கள் ஆழ்ந்திடும்
மன்புக லூடேதான் மனிதம் தொலைந்திடும்
வன்புயல் மீதிலும் வரலாறு தூர்ந்திடும்..
இந்தப் பொழுதில்நீ எங்கதுயர் போக்கிவா! -ஓங்கார

மானுடம் பூசவா மனிதத்தைப் பேசவா
கூனிடும் மாந்தரின் குணங்கள் அகற்றிவா!
பானடம் ஆடிவா பரஞ்சோதி ஆகவா!
பண்தமிழ் தந்துநீ என்தமிழ் ஆகவா! -ஓங்கார

(07)

# பிறம்ரன் பிள்ளையாரப்பா..!

## பல்லவி

பனிபடரும் பிறம்ரனில் பாங்குடன் தானிருந்து
பக்தரைக் காத்தருளும் பிள்ளை யாரப்பா?-கற்பகப்
பிள்ளை யாரப்பா!

-பனிபடரும்

## அனுபல்லவி

தனியொருவர் இல்லையென்று தமிழரெலாம் சேர்த்துவைத்த
இனியவா! பிறம்ரன்நகர் இலங்கும் எழில்முகா!

-பனிபடர்ந்த

## சரணம்

கைகூப்பிக் கும்பிடுவார் காதல்மனம் ஆகிடுவார்!
கைலாசப் பிள்ளையுனை கண்டுமகிழ்ந் தாடிடுவார்!
மெய்கூப்பித் தெண்டனிட்டு வேண்டும்வரம் கேட்டிடுவார்
அய்யாவுன் திருப்பதியில் ஆயிரமாய்த் திரண்டிடுவார்.

-பனிபடர்ந்த

ஆவணிச் சதுர்த்தியிலே ஆயிரமாய் நீவருவாய்!
அலைகடலின் மீதினிலே ஆகுசங்கம் ஆகிடுவாய்!
பாவணி இசைமேவப் ப(ா)ட்டொளியாய் நீமலர்வாய்!
பனிசிலிர்க்க வருவோர்க்குப் பாதஇதம் நீகொடுப்பாய்.

-பனிபடர்ந்த

## (08)
# யார்யார்யார் யார்?

### பல்லவி

யார்யார்யார் யார்யார்யார்-பிள்ளை
யார்யார்யார்-அந்தப்பிள்ளை
யார்யார்யார்?

தேர்ஓடும் பிறம்ரனின் தேனாக வந்தபிள்ளை
யார்யார் யார்-அந்தப்
பிள்ளை யார்யார்யார்? -யார்யார்யார்

### அனுபல்லவி

ஊர்எல்லாம் வீதிகள் ஓடுமருங் காலயம்
வாரெல்லாம் தெய்வமாய் வணங்கவரும் பிள்ளையார்..
-யார்யார்

### சரணம்

கார்மழையும் அவனிருப்பான் கடுமுழைப்பும் அவனிருப்பான்
பூமுனையும் அவனிருப்பான் புத்தகத்தும் அவனிருப்பான்
ஏர்முனையும் அவனிருப்பான் எழுத்தினிலும் வீற்றிருப்பான்
இறைவனுக்குப் பிரணவமாய் இறையாகி வீற்றிருப்பான்..
-யார்யார்

(09)

# தும்பிக்கை தானிருந்தும் தூக்கவில்லையே!

## பல்லவி

தும்பிக்கை தானிருந்தும் தூக்க வில்லையே-வல்ல
தும்பிக்கை தானிருந்தும் தூக்கவில்லையே-ஐயா
-தும்பிக்கை

## அனுபல்லவி

நம்பிக்கை கொண்டவுன்றன் நல்லமனை வந்தபின்பும்
நம்பியெனைக் கைப்பிடித்து நயம்பேசி ஆறவைத்துத்
-தும்பிக்கை..

## சரணம்

அம்பிகைக்கு வாய்த்தமகன் அய்யனுக்கு ஏற்றமகன்
கும்பிடும் அடியவர்க்குக் குறைபோக்கும் தூயநிதன்
முடிப்பிள்ளை யாரென்பான் முருகண்டி யானென்பான்
மூஞ்சூறு வாகனனாம் மோதகப் பிரியனவன்
-தும்பிக்கை..

அங்குசன் ஐங்கரன் பொங்குமா சங்கினன்
எங்கும் நிறைந்தவன் எங்கள் ஐயன்
மத்தள வயிறவன் வலம்புரி நாயகன்
சித்தியும் புத்தியும் சேர்ந்த மகன் ..
-தும்பிக்கை..

(10)

## உச்சிமலை விநாயகன்!

### எடுப்பு

உச்சிமலை வீற்றிருக்கும் ஓங்காரத் தத்துவனே
அச்சமில்லை என்றுரைக்கும் அலங்காரக் கற்பகனே
-உச்சிமலை

### தொடுப்பு

முச்சதகம் பாடினின்றேன் முன்விழுந்து தெண்டனிட்டேன்
பச்சைமலர் சாத்திவந்த பல்லக்கைச் சுற்றி வந்தேன்
-உச்சிமலை

### முடிப்பு

வில்வம்பூ செவ்விளநீர் வேப்பிலையும் மாந்தளிரும்
செந்தா மரைப்பூவும் செம்மா துளைப்பழமும்
நல்லநறும் கனிகளொடு நற்சாத்துப் படிகளிட்டு
பூங்காவ னத்துவந்த பிறம்ரன்நகர் பேரழகா
-உச்சிமலை

அச்சுவெல்ல மோதகமும் அபிஷேகம் பால்தயிரும்
சந்தனமும் குங்குமமும் சாத்திவரும் திருநீறும்
உச்சிநுதல் மேலிலங்கும் ஒளிவீசும் முடிபுனைந்த
பிச்சிப்பூ வைத்தகுகா பேரானைத் திருக்கையா
-உச்சிமலை

(11)

## விக்கின விநாயகா வா வா வா!

விக்கின விநாயகா வா வா வா
வேழ முகத்தோனே வா வா வா
மத்தள வயிறனே வா வா வா
மருதடி விநாயகா வா வா வா
கைத்தல மங்குசா வா வா வா
காரிய முதல்வனே வா வா வா!
மாம்பழம் வென்றவா வா வா வா
மாமாங்க நாயகா வா வா வா
சித்தியும் புத்தியும் சேர்ந்தே வா
சுண்டெலி வாகனா வா வா வா!
முருகண்டி யானே வா வா வா
முடிப்பிள்ளை யாரே வா வா வா
சுழிபுரப் பிள்ளையார் வா வா வா
சித்தாண்டி விநாயகா வா வா வா!
வரசித்தி விநாயகா வா வா வா
வல்வெட்டி விநாயகா வா வா வா
சித்தங் கேணியா வா வா வா
சேவித் தருளவே வா வா வா!
கீரி மலையனே வா வா வா
கேள்வினை அறுப்பாய் வா வா வா
அறுமுகன் அண்ணா வா வா வா
அஞ்சுதல் அறுப்பாய் வா வா வா!
தாண்டவன் பிள்ளை வா வா வா
தாய்உமை மைந்தா வா வா வா
பிறம்ரனின் பிள்ளையார் வா வா வா
வேவியூப் பிள்ளையே வா வா வா!
தண்டிகைத் தேரனே வா வா வா
தமிநில நாயகா வா வா வா
மண்டூர் வாசகா வா வா வா
வணங்கும் முதல்வனே வா வா வா!

(12)

# வரசித்தி விநாயகா வந்துவிடு வந்துவிடு!

### வெண்பா

வரசித்தி நாயகா வாரணக் கையாய்
உரமாகி வந்தென்னை ஏற்பாய்-அரமாகி
வன்கொடுமை யாய்மண்ணை வாட்டும் விழியருவித்
துன்பமதை நீக்கியருள் தேர்!

### பல்லவி

வந்துவிடு வந்துவிடு
வாரணனே வந்துவிடு
தந்துவிடு தந்துவிடு
தண்ணொளியைத் தந்துவிடு

-வந்துவிடு

### அனுபல்லவி

நொந்துமிக ஊரழிந்து
நெட்டுரத்தில் சீரழிந்து
சிந்திவிழும் கண்ணீரைத்
துடைத்துநீ அருள்கொடுக்க..

-வந்துவிடு

### சரணம்

நாரிழந்த மாலையென
நாதியற்ற ஓரினமாய்
ஊரிழந்து போகுதையா
உன்குடிலே சாகுதையா!

பாரிசாதப் பூத்தொடுக்க
பட்டவிடம் தேனிறைக்க
வேரிழந்த மண்ணின்மடி
விக்கினனே நீயருள்வாய்!
விக்கினனே..விக்கினனே..
விக்கினனே நீயருள்வாய்..

-வந்துவிடு..

(13)

# ரொறன்ரோவின் கந்தனே.. கந்தனே..

### பல்லவி

கந்தனே கந்தனே ரொறன்ரோ நகர்வாழும்..
கந்தனே கந்தனே.

-கந்தனே..

### அனுபல்லவி

சிந்தையிலே எந்தனுக்குச் சேவித்த திருமுருகா
சுந்தரா சிவபாலா செந்தூரா மால்மருகா

-கந்தனே..

### சரணம்

சந்தகவி நூறெடுத்தேன் சங்கதியிற் சாறெடுத்தேன்
உன்பதிலைக் காணவில்லை இதுவென்ன சோதனையோ!
மந்தையிலே ஓராடு வழிதவறிப் போனதென்று
சிந்தையிலே கொண்டனையா! செந்தூரா சொல்லுமையா..

-கந்தனே.

தேடிவந்த அடியவர்க்குத் தினம்துன்பம் தீர்ப்பவனே!
தென்றல் தவழ்ந்தோடிவரத் தேனாக ஈர்ப்பவனே!
நாடிவந்தோர் இல்லமெல்லாம் நம்பிக்கை தருபவனே!
நந்தாத செல்வம்சேர் நற்ரொறன்ரோ நகரோனே!

-கந்தனே...

பால னாக ஞான வேத கான மாக ஒளிர்பவன்
சீல னாக தேவ னாக தீய மாந்தர் மாய்ப்பவன்
வேல னாக வீர னாக வேங்கை யாக நிற்பவன்
மோதி சூரன் வீழத் தேவர் வாதை ஓடத் தீர்த்தவன்

-கந்தனே!

(14)

# ஐயனையனை ஆடிப்பாடுவோம்!

## பல்லவி எடுப்பு

ஐயனையன் என்றுசொல்லி அனலைநிலம் காப்பவனை
மெய்வருத்திப் பாடிநிற்பாய் மனமே!....

-ஐயனையன்

## தொடுப்பு

கையெடுத்து நேர்த்தியிடக் கவலையெல்லாம் தீர்ப்பவனை
நெய்விளக்கு ஏற்றிவைப்பாய் தினமே.. மனமே

-ஐயனையன்

## கண்ணிகள்

அனலைமண் ஆர்த்தொலிக்கும் அலைகடலின் மீதிருப்பான்
மனதை உருக்கிவந்து மனைவாசல் தனிலிருப்பான்
கனதியெனப் பாய்ந்துவரும் காண்டா மணியொலிப்பான்
சுனையாகி ஊற்றாகிச் சிந்துதமிழ்ப் பாத்தொடுப்பான்!

-ஐயனையன்

பாடி ஆடி கூடி ஓடி நாடித் தேடி ஆர்பவன்
வாடி நோக வாதை போக கோடி கோடி தருபவன்
நேர கால பூசை யாக ஊரி லாசை கொண்டவன்
வீர தீர தூர னாக வேளை யாவும் வருபவன்!

-ஐயனையன்

(15)

## அனலை ஐயனார்!

அனலைஐயன் கோவிலிலே
அற்புதப்பண் பாவினிலே
மனதிலிசை வார்த்தெடுத்துப் பாடடா-உன்றன்
வாழ்வினிக்க அருள்கிடைக்கும் பாரடா!

-அனலைஐயன்

தேரெடுத்து வீதிவந்து
தேவனையன் சோதிதந்தால்
கூடிவந்த தொல்வினைகள் மாளுமே-அனலைக்
கொஞ்சுமண்ணில் மஞ்சுமழை ஆகுமே!

-அனலைஐயன்

பூரணையும் புட்கலையும்
பூத்தமுகம் அருகிருந்தால்
ஆரமென அருளெழுந்து வீசுமே-ஐயன்
அன்புமனம் மண்ணிலெங்கும் ஆகுமே!

-அனலை ஐயன்

கண்ணிலவன் காட்சிதரக்
கன்னலெனக் கவிமலரக்
என்மனது ஊற்றெடுத்துப் பாயுமே-எங்கள்
எழில்நிலத்துத் தமிழ்சுரந்து ஆளுமே!

-அனலை ஐயன்

காதல்மனம் கொண்டவனை
கனியருளின் மன்னவனை
போதெல்லாம் வாழ்த்துமொலி கேட்குமே-இன்பப்
பூவிரிந்து தாய்நிலமே பூக்குமே!

-அனலை ஐயன்

(16)

# கார்மழையும் அவனே காற்றும் அவனே!

காரிருக்கும் மழையிருப்பான்
காற்றினிலும் அவனிருப்பான்
பூவிரியும் சோலையெல்லாம்
பூக்களொடும் வீற்றிருப்பான்! -காரிருக்கும்

ஏழைகளின் ஏரிருப்பான்
எழுத்துகளின் கூரிருப்பான்!
பாவிகளைச் சரித்திடுவான்
பாவவினை எரித்திடுவான்! -காரிருக்கும்

தாழையிலும் அவனிருப்பான்
வாழையிலும் அவனிருப்பான்
ஆழநீர் ஊற்றெடுக்கும்
ஆற்றுமணல் மீதிருப்பான் -காரிருக்கும்

கற்பனையும் அவனெனக்கு
கவிப்புனலும் அவனெனக்கு
அற்புதமும் எந்தனுக்கு
ஐயனவன் அருட்கணக்கு! -காரிருக்கும்

ஓடோடி வந்திடுவான்
உறுதுணையாய் நின்றிடுவான்
நாடோடி ஆனபின்பும்
நாடிமனம் வென்றிடுவான்! -காரிருக்கும்

(17)

# நயினார்குளத் தெய்வம்

## எடுப்பு

நயினாகு ளம்மேவும் நல்லனலை நிலமடியில்
அய்யனென வீற்றிருக்கும் ஐயனாரே! -நயினா

## தொடுப்பு

மையநறும் மாதரொடு வள்ளலெனக் காதல்செய்து
பொய்கைவனம் பூத்திருக்கும் ஐயனாரே! -நயினா

## முடிப்பு

கார்முகிலும் மழைதருவான் கடலலைக்கும் தடைவகுப்பான்
ஏர்உழவும் அவனிருப்பான் எழுத்தினிலும் அணிவகுப்பான்
தாய்மனதை ஐயனவன் தங்கமென வார்த்திருப்பான்
சேயெனவெ அடியவரைச் சிறகினிலே சேர்த்திருப்பான்!
-நயினா..

குறையொன்றும் தாரான் நிறைசெல்வம் ஈவான்
நறைகொண்ட கனியாய் நல்வாழ்வில் இனிப்பான்
மறைமாந்தர் வேதம் மந்திரத்தில் ஒளிர்வான்
கறையொன்றும் வையான் காவலிட்டு அருள்வான்
-நயினா

## (18)
# பள்ளம்புலம் குமரக்கோட்டப் பாசமுருகன்!

### பல்லவி
பள்ளம்புலம் வதியும் உள்ளக் குமரனவன்
பாரெனக்குக் காட்டுவித்த பாச இறைவன்

-பள்ளம்.

### அனுபல்லவி
வெள்ளவயல் சூழ்ந்திருக்கும் விளைநிலத்து வேல்முருகன்
சொல்லியென்னைக் கனடாவில் சேர்த்துவிட்ட மால்மருகன்

-பள்ளம்

### சரணம்
ஓரிரவு என்விழியில் உமைபாலன் கோவிலிலே
நானிருந்து பாடுகிறேன் நம்பியெனைக் கைப்பிடித்து
வாரெடுத்து விளையாடி வண்ணமிட்டான் காலையிலே
வருகவென அழைப்புவந்து வந்தேன்யான் துருவமப்பா!

-பள்ளம்

சோதனைக்குப் பாதைசொல்வான் சுந்தரத் தமிழளிப்பான்
வீதிவழிக் காரிருளில் விளையாடி மணியொலிப்பான்
நாதமெனப் புலவோர்க்கு நல்லியலைக் கொடுத்திடுவான்
காதையிலே முருகனருள் கண்டவர்கள் பலரிருக்கும்

-பள்ளம்

(19)

# தாய்போலும் தங்கமுருகன்!

## பல்லவி

தாயினைப் போலொரு தண்ணொளி பரவிட
நீயருள் செய்கின்ற நிலமல்லவா முருகா.. -தாயினைப்

## அனுபல்லவி

கோயிலும் சுனையும் குடிகளும் இலங்கும்
குமரக் கோட்டம்நின் குடிலல்லவா .. -தாயினைப்

## சரணம்

கல்லுப்பு ளித்துநெல்லுக் கதிர்கொட்டி ஆடுகின்ற
சொல்லுக்கு ளித்துவரும் சிந்துர(த்து) வயல்முருகா
அல்லும் பகலுமு(ன்)னை ஆராவ திக்கையிலே
சொல்லும் திறனும்தரும் தூரன்நீ அல்லவா! -தாயினைப்

வள்ளிதெய்வ யானையொடு வாசலிலே எழுந்தருள
உள்ளமொரு மத்தாப்பாய் ஓடிவந்து ஆடுமையா!
பள்ளம்புல முருகா பாத்தந்துப் போதையிட்ட
பழனிச் சிவப்புதல்வா பண்தமிழின் பாவலா..! -தாயினைப்

(20)

# ஜெயம்பல புரியும் ஜெயதுர்க்கா

### பல்லவி

ஜெயம்பல வருளும் ஜெயதுர்க்கா-பிறம்ரன்
மிசிசாகா நகர்வாழும் ஜெயதுர்க்கா.. -ஜெயம்பல

### அனுபல்லவி

இயம்பிடும் அடியார் இன்னலைத் தீர்க்கும்
இனியவள் எழிலவள் என்றே இலங்கும்... -ஜெயம்பல

### சரணம்

காளியாய் நீவருவாய் காஞ்சிமக ளாய்வருவாய்!
கனகதுர்க்கை யாய்வருவாய் காந்தர்வ ளாய்வருவாய்!!
மீனாட்சி விசாலாட்சி வேப்பிலையின் காமாட்சி
தானாட்சி கொண்டவளாய் தாயாய் வருபவளாம்..!
-ஜெயம்பல

தெல்லிப்பளை மாதினி திருக்கைகலைச் சோதிநீ
மதுரையிலே மீனாட்சி மாங்காட்டு அம்மன்நீ
காஞ்சியிலே காமாட்சி கனடாவில் ஜெயதுர்க்கா
வீரமா காளியம்மா விதந்தருளும் தேவியம்மா..
-ஜெயம்பல

(21)

# கோலமயில் முருகன்வாழ் குமரக்கோட்டம்!

வேலணையும் சரவணையும் மயிலப் புலமார்
விரிந்தவயல் நிலம்நாடி வீற்றே யிருப்பான்!
கோலமயில் முருகன்வாழ் குமரக் கோட்டம்
கோலோச்சும் குழந்தையவன் குடிலே கண்டேன்!
பாலவடி வானவனாம் பாவை வள்ளிப்
பக்கத்தில் தெய்வானைப் பயில்வாள் சேரச்
சோலையிடும் சிவமைந்தன் சோதி யன்னான்
திருக்கரங்கள் அருள்செய்யும் திருவே கண்டேன்!

ஆடுகின்ற மாமயிலும் அஞ்சேல் என்கும்
அருள்கின்ற வேல்காட்டும் அழகே சொல்லிப்
பாடுகின்ற தீந்தமிழும் பதமும் ஆகப்
பரவுகின்ற செங்கழலே பயிலப் பெற்றோம்!
மூடுநிசி வேளையிலும் மீட்டும் மணியில்
முருகனவன் விளையாடல் மோகம் கண்டோர்
கூடுகின்ற பெருஞ்சாரக் குமரக் கோட்டம்
கொஞ்சுமா அருள்சுரக்கும் கோவில் தானே!

(22)

# கவிகொடுக்கும் கந்தன்!

பள்ளம்புலம் வதியும் வள்ளிக் கணவனவன்
உள்ளத்தில் நிறைந்தானடி-கிளியே
உள்ளத்தில் நிறைந்தானடி!
தில்லை நாதனுக்கே நல்லதமிழ்க் கவிபடைக்க
தேனாய் இருந்தானடி-முருகன்
தேனாய் இருந்தானடி!

அள்ளும் கவிகொடுக்க தெள்ளு தமிழ்ப்புலவர்
துள்ளித் திரிந்தாரடி-கிளியே
துள்ளித் திரிந்தாரடி!
பள்ளம் புலமுருகன் வெள்ளம் எனக்கொடுக்கும்
பாட்டுக்கு இணையேதடி-கிளியே
பாட்டுக்கும் இணையேதடி!

(தில்லைநாதன்: பள்ளம்புலம் தில்லைநாதப் புலவர் அவர்களது மணிவிழாவிற் பாடியது-1966)

(23)

## சிவபாலா!

சிவபாலா சிவபாலா-எம்மைச்
சேவிக்கவந்த சிவபாலா
தவபாலா தவபாலா-எங்கள்
தங்கக் குடமே தவபாலா! -சிவபாலா

குமரேசா குமரேசா-குமரக்
கோட்டத்தி லமர்ந்த குமரேசா!
உமைபாலா உமைபாலா-எங்கள்
உயிருக்குள் உயிரே உமைபாலா!! -சிவபாலா

பால பாலா பால பாலா
பக்திக் கனலே பால பாலா!
வேல வேலா வேல வேலா
வினைகள் போக்கும் வேல வேலா! -சிவபாலா

சிவபாலா சிவபாலா-எங்கள்
சோதிஒளியே சிவபாலா!
குகபாலா குகபாலா-எங்கள்
குலத்து விளக்கே குகபாலா! -சிவபாலா

(24)

# மொன்றியல் நகர்வாழும் முக்கண்ணன் மைந்தன்!

### எடுப்பு

மொன்றியல் நகர்வாழும் வேல்முருகா- எங்கள்
வெவ்வினைகள் போக்கவரும் மால்மருகா.
-மொன்றியல்

### தொடுப்பு

பொன்புகலும் துருவமதில் புகுந்ததொரு நாள்முதலாய்
அன்பகலா திருத்தியென்னை அருகினிலே வைத்தவனே!
-மொன்றியல்

### முடிப்பு

ஐந்துகோடி வெள்ளியிலே ஆலயத்தைக் கண்டவனே!
அடியவர்கள் துயர்தீர்த்து ஆனந்தம் கொள்பவனே!
சிந்தார வள்ளிதெய்வ யானையொடும் சோடிவைத்துத்
தேரோடும் திருமுருகா செண்பகா..சண்முகா
-மொன்றியல்

பனிகொண்ட வேளையிலும் மனம்வெந்து பாடிவரப்
பனியாகத் துயர்தீர்க்கும் பாலமுருகா!-உந்தன்
மனைவந்து அருகாடி மனம்விட்டுப் பேசியொரு
மணித்துளியில் ஓடிவரும் மயில்முருகா முருகா!
-மொன்றியால்

(25)

# தெல்லிநகர் வாழுகின்ற துர்க்கை அம்மாள்!

### பல்லவி

தெல்லிநகர் வாழுகின்ற துர்க்கை அம்மா- எங்கள்
தேசத்தில் அருள்கொடுக்கும் காளி அம்மா- அம்மா
-தெல்லிநகர்

### அனுபல்லவி

செல்விமகள் தங்கம்மா தெய்வமாகினாய் அவள்
திருப்பணியில் பேரொளியின் தேவியாகினாய்! -அம்மா
-தெல்லிநகர்

### சரணம்

பாரெல்லாம் உந்தனுக்குப் பாடல் கண்டோம்
படைவீடு போற்கோவில் பளிங்கு கண்டோம்!
நீரெல்லாம் பனியாகும் நிலத்தில் வந்தும்
நின்னருளின் நெய்விளக்கைக் காணு கின்றோம்!.
-தெல்லிநகர்

மொன்றியலில் றொறன்ரோவில் கோவில் கண்டோம்
மேதினியாம் இலண்டனிலுன் வீடு கண்டோம்!
சென்றவிடம் யாவிலுமே துர்க்கா உன்றன்
திருக்கோவில் காணுகின்றோம் தேவி அம்மா!
-தெல்லிநகர்

(26)

# ஓம்சிவ.. ஓம்சிவ!

ஓம்சிவ ஓம்சிவ ஓம்சிவ ஓம்!
ஓம்சிவ ஓம்சிவ ஓம்சிவ ஓம்! -ஓம்

உலகநாதா பரமார்த்தா
உமையவள்நாதா உயிர்வதனா
அகிலநாதா அருமறைவேதா
அற்புதம் புரியும் கண்ணுதலா! -ஓம்

கைலையங்கிரியின் கைலாசா
கங்கையைச்சுமந்த திரிசடையா
சிதம்பரஈசா திருநடனா
திருக்கேதீஸ்வரத் திருமுதல்வா.. -ஓம்

கோணேஸ்வரத்துக் கொற்றவனே
குவலயமெல்லாம் வீற்றவனே
முன்னேஸ்வரத்து முதல்மகனே
முத்தமிழ்பாடும் முக்கணனே! -ஓம்

தேவர்கள் காக்க நஞ்சுண்டாய்
தருமியைக் காக்க இசைதந்தாய்
ஆவதும் அழிவதும் உன்னசைவே
அகிலத்து இறையே சங்கரனே -ஓம்

(27)

# நாச்சிமாகாளி!

### பல்லவி

மருவத்தூர் வாழுகின்ற மாகாளி உன்னை
மனம்திறந்து பாடுகின்றேன் ஓம்சக்தி!
- மருவத்தூர்

### அனுபல்லவி

அருவிலுரு வாகவரும் அம்மாவுனை அழைக்க
பெருகிவரும் துயரமெலாம் பூப்பனியாய் மறையுதம்மா!
-மருவத்தூர்

### சரணம்

காவல்மகள் நிலம்மேவிக் காவல் செய்யடி-அந்தக்
கனித்தமிழர் குடிமேவிக் காதல் செய்யடி!
சூலமொடு துள்ளிவரும் தேவி அல்லவா?-நீ
தீயவற்றை எரிக்கின்ற சோதி அல்லவா?
-மருவத்தூர்

அன்பருளம் நீமலர்ந்து ஆட்சி செய்குவாய்-உன்றன்
அடியவர்கள் துன்பமெலாம் மீட்க வருவாய்!
அன்புஅம்மா ஆசையம்மா ஆதிபரா சக்தியம்மா..
அழகம்மா.. அருளம்மா.. ஓம்சக்தி அம்மா.. -அம்மா
-மருவத்தூர்

(28)

# காளியம்மா காளியம்மா வா வா வா!

காளியம்மா காளியம்மா வா.. வா.. வா..
காத்தருளும் தெய்வமம்மா வா.. வா.. வா..
ஊழிமுதல் ஆதியம்மா வா.. வா.. வா..
உமையவளின் சக்தியம்மா வா.. வா.. வா..!

ஓங்கார அம்பிகையே வா.. வா.. வா..
உலகண்டம் காப்பவளே வா.. வா.. வா..
நீங்காத துயர்துடைப்பாய் வா.. வா.. வா..
நிலப்போரின் நாயகியே வா.. வா.. வா..!

திரிசூலக் கரத்தாளே வா.. வா.. வா..
தேசுதரும் வரத்தாளே வா.. வா.. வா..
பாசாங் குசம்கொண்டாய் வா.. வா.. வா..
படைவட்டப் படைகொண்டாய் வா.. வா.. வா..!

கபால மாலையிட்டாய் வா.. வா.. வா..
கட்டளைகள் நீயிடுவாய் வா.. வா.. வா..
நெருப்பாடும் கூந்தலினாய் வா.. வா.. வா..
நெஞ்சுகனல் அம்மனடி வா.. வா.. வா..!

நீளநாக்கு சிவந்திருப்பாய் வா.. வா.. வா..
நீறாக்கும் சுடலையம்மா வா.. வா.. வா..
வாளேந்தும் வடிவம்மா வா.. வா.. வா..
வாகைதரும் தெய்வம்நீ வா.. வா.. வா..!

(29)

# ஆதிபரா சக்தி!

## தொகையறா

வீரமா காளியே வெற்றியுமை தேவியே
சூரியர் சந்திரச் சுந்தரியே-பார்வதிதன்
குண்டலிகா சக்தியே கூற்றம் முடிக்கவரும்
அண்டம் கடந்தவளே ஆதி!

## பல்லவி

ஆதிபரா சக்தியம்மா ஆதிபரா சக்தி!-அந்த
மேர்மருவத் தூரினிலே வீற்றிருக்கும் மாசக்தி!

-ஆதிபரா

## அனுபல்லவி

வீதிதொறும் கலசமிட்டு விரதமிட்டோம் சக்தி!
வேதனையை விலக்கவென விளக்குஇட்டோம் சக்தி!

-ஆதிபரா

## சரணம்

பாரோடும் ரொறன்ரோவில் பதியிருக்கும் ஓம்சக்தி!
பண்ணெடுத்துப் பாடுகையில் பாசமிடும் ஓம்சக்தி!
வாரோடும் கண்ணீரில் வந்தருளும் ஒம்சக்தி!
வாரியணைத் தோடிவந்து வாஞ்சையிடும் ஓம்சக்தி!

-ஆதிபரா

செஞ்சடையில் நெருப்புவரும் திருவிழியில் அனல்பொழியும்
அஞ்சலென எழுந்துவந்தால் ஆர்த்துவரும் திரிசூலம்
கையிருக்கும் கபாலம் காத்திருக்கும் அங்குசமே
வையமெலாம் இனங்கடந்து வரமளிக்கும் ஆதி அம்மா

-ஆதிபரா.

(30)

# சிலுவை சுமந்த யேசுவே வலியைத் துடைக்கவே நீவா!

## பல்லவி

சிலுவை சுமந்த யேசுபிரானே-கோடிச்
சிலுவைகள் சுமந்தோம் யேசுபிரானே..

-சிலுவைகள்

## அனுபல்லவி

வலிகளின் அளவு வரைகடந் தனவே-எங்கள்
மனத்துயர் அளவு திரைகடந் தனவே!

-சிலுவைகள்

## சரணம்

கதறிடக் கதறிடக் கற்பழித்தாரே-ஐயா
கருகிய பிஞ்சுகள் கணக்கறியாயோ?
பதறிடப் பதறிடச் சாவடைந்தாரே-அந்தப்
பலிக்களம் சிலுவையின் பரிதவிப் பலவோ?

-சிலுவைகள்.

மாட்டுத் தொழுவமும் மாளடிந்தனவே-அங்கே
மேரியின் சொரூபமும் வெடியுடைத்தனவே!
மீட்டவர் ஜீவனம் விளங்கவா தேவா-எங்கள்
மேன்மைக் குடிநிலம் மீளவா தேவா!

-சிலுவைகள்

(31)

# திரௌபதை அம்மன் தேவியளே...!

### பல்லவி

கிழக்குமண்ணின் ஒளிபடைத்த திரௌப தையே-அம்மா
அழகுநிலம் காத்தெம்மை ஆதரியே ..எங்கள் -கிழக்கு

### அனுபல்லவி

உழக்கிவரும் துன்பமெலாம் நீமிதியாய்-உன்
உயருமக்கள் நடந்துவறார் தீமிதியாய் ..வீரக் -கிழக்கு

### சரணம்

கனிமண்ணில் உன்மக்கள் காதல்கண்டேன்-ஆங்கே
கனத்துவரும் துன்பமதில் சாதல்கண்டேன்-எங்கள்
இனத்துவளர் சோகமதை உணரவில்லையா?-அடி
என்னம்மை திரௌபதையே என்றும் தொல்லையா?
-கிழக்கு

ஈஸ்வரம் போற்றிநிற்கும் இதய மண்ணிலே-ஆங்கே
ஈஸ்வரிநீ யிருக்குமெழில் எழிலாம் மண்ணிலே
கூசுமொரு மனிதர்களின் கூட்டமோடி-தெய்வக்
குலக்கொழுந்தே தீயர்களின் ஆட்டமோடி ..அம்மா
-கிழக்கு

(32)

# துர்க்கேஸ்வரத் துர்க்கையம்மா!

### பல்லவி

துர்க்கேஸ்வரம் வதியும் துர்க்கையம்மா-எங்கள்
தொல்வினைகள் போக்கிவரும் தெய்வம்மா ..அம்மா
-துர்க்கேஸ்வரம்

### அனுபல்லவி

அர்ச்சனைகள் உந்தனுக்கு ஆயிரமாம்-செவ்வாய்
அருள்கொடுக்கும் அற்புதமோர் பாயிரமாம் ..அம்மா
-துர்க்கேஸ்வரம்

### சரணம்

கற்பனையில் இல்லையுந்தன் காணருளே-துயர்
கண்டுருகப் பயன்பெறுவார் பேரருளே
அற்புதங்கள் சாற்றிவரும் அங்குசத்தாய்-என்றும்
அழகொளிரக் காட்சிதரும் அருள்வடிவாய்..
-துர்க்கேஸ்வரம்

தேரோடும் மாமதுரைத் திருவுளத்தாய்-எங்கள்
துன்பங்கள் பறந்தோட அருள்கொடுப்பாய்..
பாரோடும் உந்தனுக்கோ ஆலயங்கள்-ரொறன்ரோப்
பதிகொடுக்கும் துர்க்கையுந்தன் தரிசனங்கள்
-துர்க்கேஸ்வரம்

(33)

# குக்கூ குக்கூ குயிலக்கா..!

## எடுப்பு

பூங்குயிலே பூங்குயிலே-நீ
போனஇடம் காண்கலையே! -பூங்

## தொடுப்பு

ஏங்கியுனைக் குக்கூ வென்ற
என்னழைப்பும் கேட்கலையே? -பூங்

## முடிப்பு

ஓரிரவுக் குள்ளேயெங்கள்
ஊர்விழுந்து போச்சுதடி
வேர்பிளந்த மாமரத்தில்-உன்
வேய்ங்குரலும் போச்சுதடி! -பூங்

தாயிருந்த மணிநிலத்தில்
நீயிருக்க வழியில்லையே
கூவியுனைக் குக்கூவென்று
கூப்பிட உன் ஊரில்லையே! -பூங்

குமரக்கோட்டம் முருகன்மணிக்
கோவிற்பக்கம் போகவில்லை
போர்கடந்த பூமியிலே
பெரும்துயரம் மாறவில்லை! -பூங்

நானிழந்த நிலமடியில்
கானிழந்து நீபறந்தாய்!
தேனழைந்து குக்கூவென்று..
குக்கூ குக்கூ.. குக்கூவென்று
நீயழைக்கும் நாள்வருமா?-அடி
நீயழைக்கும் நாள்வருமா? -பூங்

(34)

## கந்தா குமரா கதிர்காமா..!

கந்தா குமரா கதிர்காமா-எங்கள்
காக்கும் தெய்வம் விடலாமா? ஆ..ஆ.. -கந்தா

சிந்து தமிழின் சோலைவனம்
தீய்ப்பிழம்பில் விழலாமா...ஆ..ஆ.. -கந்தா

கால்நடை நடந்து கண்டவர்கள்-அருண
கவிக்கிரி புகழைத் தந்தவர்கள்
வேல்மகன் என்று வேண்டியவர்-இன்று
வேரினைப் பிரிந்து கலங்குகிறார்.. -கந்தா

முத்துத் தமிழன் துயர்கண்டான்-எங்கள்
மொய்நில மெங்கும் வலிகண்டான்
செத்துக் கிடப்பதுன் வேலாமோ-எங்கள்
துயரம் காத்திடு கதிர்வேலா! -கந்தா

(35)

# நல்லமணி

## பல்லவி

நல்லமணி வந்துவிழ
நங்கையெழில் சிந்திவர
பொங்குதமிழ் முந்திவரப்
பூத்திடுமா எங்கநிலம் -நல்லமணி

## அனுபல்லவி

முல்லைநிலம் வன்னிநிலம்
மொய்பவள மன்னார்நிலம்
எல்லையிலாக் கடல்நீளம்
இருக்குமெழில் நிலமனைத்தும்.. -நல்லமணி

## சரணம்

நல்லையிலும் சன்னதியும்
வற்றாப்பளை அம்மனுக்கும்
எல்லையிலா முன்னேஸ்வரம்
ஈஸ்வரியாம் நயினையிலும்
மாமாங்கம் கதிர்காமம்
மாகாளித் திரியாயும்
எல்லாமும் விதந்தருள
எங்கநிலம் பூக்குளிக்க... -நல்லமணி

உயிர்கருகிப் போகுமிந்த
எழில்நிலத்தில் தோய்ந்துநிதம்
துயர்எடுத்து வாழுதந்தோ!
நெறிபிசகிப் போகுதந்தோ!
பயிர்நிமிர்ந்து நடமாட
பசுமரங்கள் விசும்பாட
தயிர்நிலமே இறைமலியத்
தங்கநிலம் வாராதோ? -நல்லைமணி

(36)

## ஆச்சியுனைப் போற்றுவோம்!

### எடுப்பு

ஆச்சியுனைப் போற்றுவோம்
ஆச்சியுனைப் போற்றுவோம்!-எங்கள்
ஆயுளுள்ள காலம்வரை..
அன்புலகம் வாழும்வரை -ஆச்சியுனைப்

### தொடுப்பு

பேச்சிலொரு மாலைகட்டி வெற்றிலையைக் குதப்பியொரு
வீச்சிலொரு நடைபயின்று வீடுவரும் எங்களுயிர்..
-ஆச்சியுனை

### முடிப்பு

நாச்சிமார் கோவிலொடும் நல்லவரம் அருளுகின்ற
பூச்சதங்கை முருகனொடும் பெருங்காவல் ஐயனொடும்
சுற்றவயல் வைரவரின் திருக்கரங்கள் கூட்டியெமைப்
பற்றுவைத்த தாயவளே பாடல்தந்த பொன்னுளமே..
-ஆச்சியுனைப்

மாரியம்மன் வீதியிலே மண்டியிட்டுச் சுற்றிவந்து
நேர்த்திவைத்துக் கும்பிட்டு நீள்நிலத்தில் வாழ்ந்தவளே
தாயவளே தண்ணமுதே தங்கமணித் தெய்வமகள்
ஆயவளே அற்புதமே அமைதிப் பொற்குடமே..!
-ஆச்சியுனைப்

(எனது தாய்த்தெய்வத்தின் மேல் பாடப்பெற்றது)

(37)

# தொல்வினைகள் தீர்த்தருளும் நல்லை முருகன்!

### பல்லவி எடுப்பு

தொல்வினைகள் தீர்த்தருளும் நல்லை முருகன்-அவன்
தொல்வினைகள் தீர்த்தருள வல்ல முருகன்!
-தொல்வினைகள்

### தொடுப்பு

வல்வினைகள் அல்லலெலாம் வாரியெறிந் தழித்துநிதம்
நல்வினைகள் ஆக்குவித்து நற்பதங்கள் காட்டிடுவிடும்!
-தொல்வினைகள்..

### கண்ணிகள்

கானவள்ளிக் குறமகளைக் காதலித்து வென்றவன்
கனிமகளாம் தெய்வயானைக் கைதொடுத்து நின்றவன்
வானமரர் போற்றிநிற்கும் ஆறுபடை யானவன்
வைகையெலாம் நீரளிக்கும் வண்ணமழை போன்றவன்
-தொல்வினைகள்

நற்றமிழால் பாடுகின்ற நல்லைநகர் காண்பவன்!
நாடிவரும் பேரடியார் நத்துதுன்பம் தீர்ப்பவன்
பெற்றதாய் போலுமொரு பூங்கருணை பொழிபவன்
பொல்லாநோய் எல்லாமும் இல்லாது ஒழிப்பவன்..
-தொல்வினைகள்..

(38)

# ஐயப்பன் புகழ்பாடுவாய்!

## பல்லவி

ஐயப்பன் புகழ் பாடுவாய்-மனமே
ஐயப்பன் புகழ் பாடுவாய் -ரொறன்ரோ -ஐயப்பன்

## பல்லவி எடுப்பு

மெய்யப்பன் துதிபாடி வேண்டுவரம் நீநாடிக்
கைதொழுது கும்பிடவே கனிந்தருளும் தெய்வமவன்
-ஐயப்பன்..

## கண்ணிகள்

பொய்மகனாய் வாழாதே புத்திகெட்டுப் போகாதே
பேதலித்து நீதிரிந்து பிடிசாம்பர் ஆகாதே
மொய்கொடுக்கும் ஐயப்பன் வெண்பனியில் வீற்றிருந்து
கைகொடுக்கும் அப்பனைநீ காலமெல்லாம் மறவாதே!
-ஐயப்பன்

ரொறன்ரோவின் சபரிமலை கோவிந்தப் பசனைஒலி
திறம்பாடி நாளெல்லாம் தீபமிடும் மெய்யடியார்
அறம்பாடி மாலையிட்டு அய்யப்பா எனக்கூவிச்
சிறந்தார்க்கு அருள்செய்யும் மிடில்பீல்ட் உறைகாந்தன்
-ஐயப்பன்..

(39)

# மயிலப்புலம் ஐயனாரே!

### பல்லவி

ஆலமரம் அடியிருக்கும் ஐயனாரே-மயிலைக்
கோலநிலம் காவல்செய்யும் ஐயனாரே..ஐயா..

-ஆலமரம்

### அனுபல்லவி

காலமெல்லாம் காரிருளும் காக்கவருவாய்-உன்னைக்
கைதொழுது கண்டவன்யான் பார்க்கவருவாய் ..ஐயா

-ஆலமரம்

### சரணம்

சோலைநிலம் உந்தனுக்குச் சொந்தமல்லவா-நீ
சுற்றிவந்து பார்வையிடும் வேந்தனல்லவா!
காலையிலும் மாலையிலும் மணியொலிக்குமே-அந்தக்
கணப்பொழுதில் ஊர்முழுதும் உனைநினைக்குமே!

-ஆலமரம்

நீயிருந்த அன்னைமண்ணில் உன்னைவிட்டேன்-நில
நெருப்புவந்து சூழ்ந்ததினால் என்னைவிட்டேன்
தாயிருந்த தேசமண்ணில் தீயிருக்கவோ-ஐயன்
தங்கநிலம் தறிகெடநீ பார்த்திருப்பதோ..!

-ஆலமரம்

சோதிமய மானவெங்கள் ஐயனாரே-நீ
சூழ்ந்ததுன்பம் நீக்கிடுவாய் ஐயனாரே
ஆதிமுதல் தெய்வமெங்கள் ஐயனாரே-எங்கள்
அன்னைமண்ணின் துயர்களைவாய் ஐயனாரே!

-ஆலமரம்

(40)

# ஏழுகடல் நயினை அம்மா!

**பல்லவி**

ஏழுகடல் நயினை அம்மா-அம்மா
ஏழுகடல் நயினை அம்மா!
சூழும்வதை வாழ்வுக்கடல் ஆழ்துயரம் நீக்கிவிடும்..
-ஏழுகடல்

**அனுபல்லவி**

ஏழாற்றுப் பிரிவினிலும் ஏறிக்கரை தானமர்ந்து
இடர்மலிய வருவார்க்கு இங்கிதங்கள் கொடுக்குமன்னை
-ஏழுகடல்

**சரணம்**

வாழுங்கடல் மூழ்கிநிற்கும் வல்வினைகள் சூழநிற்கும்
பாழுமொரு வாழ்க்கையிலே பட்டவர்க்கு ஏதுகதி!
ஆழநீர்ப் பாவவினை அம்பிக டாவிநிற்கும்
அம்மன்நீ இல்லையெனில் அலைமாந்தர்க் கேதுகதி
-ஏழுகடல்

ஊருலகம் பாய்ந்துவர உன்னைவிட்டு ஓடிவர
தேரவைத்த தென்னடியோ? செல்லாச்சி சொல்லடியோ!
காருலகம் கண்டவளே கருணைவெள்ளம் கொண்டவளே..
தீமிதிக்கக் காண்பதுவோ? துன்பமது தான்முடிவோ.
-ஏழுகடல்

# தெய்வமும் தீந்தமிழும் !

## பகுதி:02
## தீந்தமிழ் நாற்பது.

# மனவுரை

என்றுமுள்ள தீந்தமிழ் எங்கள் மனவெளியின் மாற்றம் புனையும் ஒரு சக்தி!.

மொழியின் அழிப்பு நிகழ்ந்துவிடக் கூடாது என்பதற்காகவே தமிழரின் அறுபதாண்டு கால அரசியல் வாய்ப்பாடு இருக்கிறது.

தேவாரம், திருவாசகம், திருமுறைகள் மட்டுமல்ல ஐம்பெரும் காப்பியங்களும் தீந்தமிழை உலகுக்கு அளித்த திரவியங்கள்.

திருமுறைகளைப் பயின்றுவர மனப்பாடம் செய்து ஓதிவர, கவிதையுள்ளம் தானாக வரும் என்பது கண்ணதாசன் கருத்து.

அறுபதுகள், கவியரங்கங்களின் நிகழ்வுகள் முத்தமிழ் விழாக்கள் தோறும் நடந்தன.

அன்றைய மகாகவிகள் கூட்டம் விழாக்கள் தோறும், கலை நிகழ்வுகள் தோறும் அலங்கரிக்கப்பட்ட காட்சிகளைப் பார்த்ததினால் தீந்தமிழ் மயக்கமுற்றுப் பாவெழுதும் உள்ளத்தோடு பரிட்சயமாக் கப்பட்டேன்.

**அடர்மர அடவியும் அணிமலர்ச் சோலையும்**
**பாடிப்பறந்து கூடிக்களித்துச்**
**செவ்வாய் முகிழ்த்து கொவ்வை புசித்துக்**
**களிமிக அடையும் பச்சைக்கிளியே..பச்சைக்கிளியே!**
**பாங்குடன் நானும் பருமோர் செய்தி..!**
**காலையம் பரிதியும் மாலை மதியமும்**
**சோலைச் சுகந்தமும் சொர்க்கமே சொர்க்கம்..**
**எனினும் கிளியே.. என்னுரை கேட்பாய்!**
**தச்சன் கூடே சதமாய் இருப்பினும்**
**பச்சைக்கிளியும் இச்சையுடன் இருந்து**
**அம்மா.. அப்பா.. அக்கா... இன்னும்**
**அன்பே அமுதே ஊற்றே என்று..**
**வண்ணக் கிளியும் வானத் தமிழில்**
**புரிதமிழ் அழகே அழகு!..** (1965)

என்ற கவிதை அறுபத்தி ஐந்தாம் ஆண்டளவில் ஈழநாடு வாரமலரில் சசிபாரதி அவர்களால் பிரசுரிக்கப்பட்டது.

அதே பாடலைக் கவிஞர் தில்லைச்சிவன் எழுத்தாளர் தீபம். பார்த்தசாரதியின் பாடல் ஒன்றோடு ஒப்பிட்டுச் சிறப்பான பாடலாக அங்கீகரித்தார்.

என்தாய் எனக்களித்த தமிழோடு இதுவரை பல கவி யரங்கங்கள்.. பல ஆயிரம் பாடல்கள் எழுதியபோதும் இந்தத் தீந்தமிழ் பற்றிய சில பாடல்களை உங்கள் முன் தருகிறேன்.

குற்றம் களைந்து குணம் கொள்ளுதல் எங்கள் மரபு என்ற வகையில் உங்களிடம் உவந்தளித்து விடைபெறுகிறேன்.

வணக்கம்!

-தீவகம் வே. இராசலிங்கம்

(01)

# எம்மொழியே செம்மொழியே!

### தொகையறா

தேனமுதே! தித்திக்கும் கனியமுதே!
தீந்தமிழ்க் கவிகொடுக்கும் திரவியமே!
மானத்து வாழ்வுதரும் மருக்கொழுந்தே!
மண்மகளே செந்தமிழே வாழ்கவாழ்க!

### எடுப்பு

தமிழே தங்கத் தமிழே-நீ
தானே எங்கள் உயிரே..! அம்மா -தமிழே

### தொடுப்பு

அமிழ்தே மண்ணின் அழகே
அகிலத் துதித்த மொழியே-முதலில்
அகிலத் துதித்த மொழியே!. அம்மா.. -தமிழே

### முடிப்பு

கவியாய் வந்து உதித்தாய்-பக்திக்
கனலாய் நிலம் பதித்தாய்..!
குறளாய்ப் புகழ் கொடுத்தாய்-தெய்வக்
குலமாய் இனம் எடுத்தாய்! அம்மா! -தமிழே

ஆதிவந்த செம்மொழியே அருந்தமிழே!
அருணகிரி யாரளித்த திருப்புகழே!
வீதிவழி வந்தவைகள் வீழ்தல் கண்டோம்-நீ
வீழ்த்தமுடி யாதவளாய் வாழ்தல் கண்டோம்! அம்மா!
-தமிழே

(02)

# தித்திக்கும் தேனமுதே.!

### எடுப்பு

தித்திக்கும் தேனமுதே-தமிழே
தித்திக்கும் தேனமுதே! -தித்திக்கும்

### தொடுப்பு

எத்திசைக்குப் போனாலும்
எதைமறந்து வாழ்ந்தாலும்
கொத்துகவி தந்துநிற்கும்
குலவுநிலம் வந்துநிற்கும்.. -தித்திக்கும்

### முடிப்பு

பொதிகைமலை ஊற்றெடுத்த பூவை யல்லவா-நீ
பொங்கும்தமிழ் நீளுலகின் பாவை அல்லவா?
அதிரும்மண் ணார்வயலின் அழகி அல்லவா-உன்
அன்புமக்கள் தருமமதின் வடிவம் அல்லவா.. -தித்திக்கும்

மோகனமே கல்யாணி ஆனந்த பைரவியே
சீதனமே உந்தனுக்குச் சிந்தான பைரவியே
பூபாளம் நான்பாடும் புலவன் அல்லவா-உன்னைக்
க(ா)னடாவில் இசைபரப்பும் காந்தன் அல்லவா...-தித்திக்கும்

(03)

# தமிழவள் எந்தன் பராசக்தி..!

### பல்லவி

செந்தமிழே என்தமிழே தேவிசக்தி -என்றன்
சிந்தனையில் நீமலர்ந்தால் துள்ளும் சக்தி!

-செந்தமிழே

### அனுபல்லவி

அந்தமிலாச் செம்மொழியே ஆதிசக்தி -என்
ஆவியிலே உறைபவளே அன்னை சக்தி!

-செந்தமிழே

### சரணம்

நாடுவிட்டு நாடுவந்தும் நான்மறப்பனோ-எந்தன்
நாவிருக்கும் தமிழழகை நானிழப்பனோ?
கூடுவிட்டுக் கூடுபாயக் குரங்குவல்லவே-எந்தன்
கொஞ்சுதமிழ் நெஞ்சைவிட்டு ஏகுமல்லவே!

-செந்தமிழே

தூவிவரும் இசைவடித்துத் தினமிருப்பேன்-உன்னைத்
திக்கெல்லாம் பாவெடுத்துக் கனிகொடுப்பேன்
ஆவியென நின்றுபுவி ஆர்ப்பவளே-எங்கள்
அருந்தமிழே இரும்தமிழே அன்னை தமிழே..

-செந்தமிழே

04

# என்னுயிரில் நெஞ்சமிட்ட இன்பத் தமிழே..!

### தொகையறா

நினைத்தபொழு தார்த்துவந்து நெஞ்சம் ஆகி
நிலமாளுங் கவிதையொடும் நிசமே யாகி
மனப்புகலும் மன்றினொடும் வசமே யாகி
மறிதுயிலும் வீரமனம் வார்ப்பே ஆகி
அனைத்துலகத் தமிழர்பால் அமுதே ஆகி
அன்னையெம் மொழியென்ற அழகே யாகி
இனத்துறையுஞ் செந்தமிழே இன்பத் தாயே
எந்தனுளம் வந்தொருகால் இரட்சிப் பாயே!

### பாடல்

அன்னையாம் நல்லாள் கல்வி
அறிவதைத் தந்தாள் தெய்வ
நன்னெறி சொன்னாள் அந்த
நயப்பினில் தமிழாள் வந்தாள்
கன்னலும் பாலும் சேர்த்து
கவிதையாய் ஊட்டி விட்டாள்
அன்னவள் தமிழாள் என்னுள்
ஆலயம் அமைத்தாள் அம்மா!

மண்மீது நிற்பாள் எந்தன்
மனவோசை கேட்டால் ஓடி
எண்ணத்தே வருவாள் பாட்டு
இசையாகி மீட்பாள் வெற்றி
வண்ணமே சொல்வாள் நாளை
வரும்தீர்வு என்பாள் அந்தப்
பெண்ணொடு வந்தேன் என்னைப்
பிரிவிலாள் தமிழே அன்றோ!

(05)

# களனியிலே புல்விளையும்..

பொங்குநடை போட்டுவர
பூச்சதங்கை தாளமிட
சாலையிலே துள்ளுநடைச்
சந்திவரும் காளைகளே!

இன்றுஎன்ன சோகமடா
இடம்பெயரும் வேகமடா
சொந்தமனை விட்டுவண்டி
தெருநீளம் போகுதடா!

தென்னையிலே பைங்கிளியின்
தீங்கூடு கலைந்ததடா
அன்னைமுலை காய்ந்துவிட
ஆர்மழலை சாகுதடா

மண்ணினிலே போர்புகுந்து
வார்பிடித்து ஆடுதடா
குண்டுமழை கொட்டிவிடக்
குடும்பமாய்ச் சாகுதடா!

நாளையொரு வேளைவரும்
நம்நாடு பாளையிடும்
காளைகளே உங்களுக்குக்
களனியிலே புல்விளையும்!

சூழ்ந்தவினை போகுமடா
சுந்தரப்பண் பாடுமடா
ஆழ்ந்ததுயர் நீயகற்றி
அஞ்சாமல் நடந்திடடா!

தர்மமென்றும் தோற்றதில்லை
தார்மீகம் வீழ்ந்ததில்லை
கர்மமெலாம் இரும்பெனவே
காலமெல்லாம் இருப்பதில்லை!

காதல்நிலம் ஊர்திரும்பும்
காலம்வரும் பாருங்கடா!
சோதனையிற் தீக்குளிக்கும்
தினம்மாறும் நாளையடா!

(06)

# காலமிட்ட கட்டளை!

### எடுப்பு

காலமிட்ட கட்டளையை
காலம் வெல்லுமே-எங்கள்
கனகமணித் திருநிலத்தைக்
காவல் செய்குமே! -காலமிட்ட

### தொடுப்பு

நீலக்கடல் தானுமது
நெருப்பு அல்லவா-எங்கள்
நிலமடியும் தாய்தந்த
இருப்பு அல்லவா? இன்று.. -காலமிட்ட

### முடிப்பு

மானிடத்தின் மகுடமிட்டு மன்னர் ஆகுவோம்-எங்கள்
வாஞ்சைநிலம் இருப்புஎனும் வண்ணம் பாடுவோம்!
ஆனமட்டும் நீதிசொல்லி அரசம் போடுவோம்-பெண்
அடிமையென்ற காலமில்லை ஆடிப் பாடுவோம்! ...
-காலமிட்ட

சீதனத்தைத் தொலைத்துவிட்டு தேசம் காணுவோம்-தீய
சிந்தனைகள் அற்றதொரு சீலம் பேணுவோம்
சாதியென்ற சாத்திரத்தைத் சரித்துப் போடுவோம்-புதிய
சந்ததியாய் நாமெழுந்து சரிதம் கூறுவோம்!
-காலமிட்ட

(07)

# நீதியை வகுத்திடுவோம்!

### எடுப்பு

சாதியைத் தொலைத்திடுவோம்-பிரிவென்னும்
சாதியைத் தொலைத்திடுவோம் நாம்..

-சாதியைத்..

### தொடுப்பு

சீதனந் தொலைத்திடுவோம் புதிய
செகத்தினைப் படைத்திடுவோம்..நாம்

-சாதியைத்

### முடிப்பு

நீதியில் விளைந்ததடா-தர்மம்
நிலத்தில் மலர்ந்ததடா!
பாதியில் நுழைந்துவந்த சாதிப்
பகுப்பெல்லாம் தொலைத்திடடா ..

-சாதியைத்

சாதனை எழுதுமடா-கல்விச்
சரித்திரம் நிகழுமடா!
மாதவள் சரிநிகராய்-என்றும்
வையமகள் ஆவாளடா!

-சாதியைத்

(08)

# மனிதம் மானுடம் வாழ்வு!

மனிதம் என்ப தென்ன?
மனிதம் கூர்ப்பின் மடியா?
புனிதம் என்ப தென்ன?
பேசும் கற்பின் வடிவா?

உயிரே என்ப தென்ன?
உடலை அசைக்கும் விசையா?
உள்ளம் என்ப தென்ன?
உள்ளே இருக்கும் உயிரா?

இதயம் என்ப தென்ன?
இதுவே மனிதக் கதவா?
கதவம் அடைத்த தென்றால்
காடை தானே விடையா?

காதல் என்ப தென்ன?
கடவுள் தந்த கனியா?
காதல் சாகு மென்றால்
கலசம் உடைந்த கதையா?

மனிதம் காதல் புனிதம் உள்ளம்
இதயக் கதவம் இறைவம் கற்பு
மானுட ஏடாய் மலர்ந்தது அம்மா
வாழ்வொரு தென்றல் வண்ணமே அம்மா!

(09)

## அவனும் அவளும்!

வாடி வாடி வடிவழகி
வண்ணச் சேலை எழிலரசி!
ஆடி ஆடும் நடையழகி
ஆலங் குயிலின் குரலழகி.. ! வாடி வாடி..

போட போடா புழுகாதே
புன்ன கைக்கும் அழகோனே!
கூடல் ராமன் வீதிவந்து
கோலம் காட்டும் எழிலோனே! -போடபோடா

சாலையோரம் நீநடந்தால்
சந்தியெல்லாம் இறுகுதடி!
வாலைக்குமரி வள்ளிபுலம்
வருகிறாயே பூங்குமரி.. ! -வாடி வாடி..

ஏறுபோலே நீநடந்தால்
இலவம்பஞ்சாய் மனம்பறக்கும்!
ஆறுபோலே நீநடந்தால்
அகிலமெல்லாம் தூள்பறக்கும்.. -போடபோடா

மதுரைத்தீயின் கண்ணகியே
வஞ்சிக்கனலே மாதுளையே
சோதனையில் தீக்குளிக்கும்
சே தசமங்கை ஆரணங்கே.. ! -வாடிவாடி

இருவரும்:
காதலிலே மூழ்கிநிற்போம்
காலமெல்லாம் தமிழினிப்போம்
சாதனையே காட்டிநிற்போம்
சரித்திரமாய் நிலைத்துநிற்போம்.. -வாடிவாடி

(சினிமாவுக்கு ஒரு பாட்டு எழுதிப் பார்போமே என்று சிந்தித்ததால் வந்த விளைவு இது)

# (10)
# போர் மடியில் எரிந்தவரே!

உயிர்கள் கொட்டுதம்மா-உங்கள்
உடல்கள் சிதறுதையா-பிஞ்சுப்
பயிர்கள் அழியுதையா-சின்னப்
பாலர்கள் கருகுதையா!

பெற்றோர் தானிழந்தீர்-கொண்ட
பெண்ணாள் உடன்பிரிந்தீர்-அட
கற்றை வைக்கோலாய்-பற்றிக்
கருகத் தீயெரிந்தீர்!

மண்ணின் மடியினிலே-நீங்கள்
மடிந்தீர் உறவுகளே-கொடும்
குண்டின் நெருப்பினிலே-ஒரு
குடிலாய அழிந்தவரே!

உங்களை வழுதுகின்றோம்-எங்கள்
உணர்வில் எழுதுகின்றோம்!
உங்கள் உயிர்வதையில்-எங்கள்
உறவைத் தொழுகின்றோம்!

நாளைய தீர்வுகளாய்-நீங்கள்
நல்கிய உயிர்க்கொடைகள்-மண்ணில்
பாளைபோல் சிரித்திருக்கும்-உங்கள்
பாதமென்றும் சுவடிருக்கும்!

வேள்வியில் எரிந்தவரே-இந்த
வேளையில் பிரிந்தவரே-எங்கள்
தோள்களில் நீரிருப்பீர்-என்றும்
தெய்வமாய் வீற்றிருப்பீர்!

(இறுதிப்போர் நாட்களில் எழுதிய கண்ணீர்)

(11)

# தமிழ் அன்னை

### எடுப்பு

தேவதை போலே அவள் நடந்தாள் -ஈழத்
தெருவெலாம் பூக்களாய்த் தான்மலர்ந்தாள்..அவள்..
-தேவதை..

### தொடுப்பு

ஆவது ஒன்றில்லை அடிபணிந்தேன் அவள்
ஆடையின் மீதுநான் குடிபுகுந்தேன்..அழகுத்
-தேவதை போலே

### முடிப்பு

மேவி நடந்தாள் விளக்காய் மிளிர்ந்தாள்-கவி
விளைத்திடு என்றே வேய்ங்கிளை மலர்ந்தாள்
தாவிடும் தென்றல் தாவணி அசைக்கும்-வீணைத்
தந்திபோல் என்மனம் தழும்புகள் விதைக்கும்.. –
தேவதை போலே

தேரே குலுங்கத் திரும்பிய தோகை
செந்தமிழ் என்றே திருமொழி பகர்ந்தாள்
நேரே தரிசனம் நித்திலம் கொடுத்தாள்-அன்னை
நிசத்தில் உணர்வில் நிலமாய் உதித்தாள்
-தேவதைபோலே

(12)

# இதயம் வரித்தவள்..!

## எடுப்பு

என்னிதயம் வரித்தவளே இன்பத் தமிழே -அம்மா
என்னிதயம் வரித்தவளே இன்பத் தமிழே -அம்மா
-என்னிதயம்

## தொடுப்பு

மன்னர்மணி மாளிகையில் வண்ணமிட்டாய்-பொதிகை
மன்றினிலே தோன்றிமண் வாகையிட்டாய்..அம்மா
-என்னிதயம்

## முடிப்பு

காலளந்த போதுமெந்தன் கண்மணியில் நீயிருந்தாய்!
நூலளந்த போதுவந்து நூலிடையே அருகிருந்தாய்!
வேலெடுத்த விழியரும்பில் வில்லரும்பத் தூதுவிட்டாய்!
சேலெடுத்த மான்விழியே செந்தமிழே ஜீவிதமே
-என்னிதயம்

சேரசோழ பாண்டியரின் சிம்மாச னத்திருந்தாய்!
எல்லாளன் மாளிகையில் இளவரசி யாயிருந்தாய்!
ஆரமுதே அங்கையளே ஆதிசங்கம் தானிருந்தாய்!
ஆடலமு தானவளே அரங்கமிடும் பொற்குவையே..
-என்னிதயம்..

(13)

# தமிழ் வாழ்த்து!

தமிழே ஈழத் தாயகமே-எங்கள்
தாயே தமிழ்நிலமே
அமிழ்தே இனிதே ஆருயிரே-உனை
ஆரா தித்தோமே! -தமிழ் ஈழ

வேங்கடம் விதையாக்கிய-நில
வேரே விருட்சகமே- உயிர்
தாங்கிடும் நெஞ்சக் கோவிலே-எம்
தாயே தமிழமுதே! -தமிழ் ஈழ

உன்பாதங்கள் துதி ஆக்கினோம்-உயிர்
உமதே நாமானோம்
மன்பூமியின் புதுத்தேசமே-
உன்மனமே வசமானோம்! -தமிழ் ஈழ

குருதியின் புயல் வார்ப்பிலே- எம்
கொற்றம் ஆனவளே
பரிதியாய் உயர் மானுடம் -பார்
பதித்த தேனவளே! -தமிழ் ஈழ

தேவே தேவநற் திருவே- மனிதத்
தேன்மொழி வாழியவே!
பாவே பாயிரத் தமிழே -இயலிசைப்
பண்பே வாழியவே! -தமிழ் ஈழ

பிரவாகமாய்ப் புகழ்ப் பாடல்கள்-உரம்
பெற்ற பெருங்குவையே
சிரம்தாளிட உன் பாதங்கள்-துதி
செய்தோம் தமிழவளே! -தமிழ் ஈழத்

(14)

# எரியும் பொழுதுகள்..

## பல்லவி

வெண்பனிப் பரப்பிலே மேபிள் மரங்களாய்
என்மனம் பரவிடும் நிர்வாணம்.. -வெண்பனிப்

## அனுபல்லவி

துண்டிலா நிழல்கள் தூரனின் கிறுக்கலாய்த்
துவண்டிட என்மனம் தினம்வாடும்.. -வெண்பனிப்

## சரணம்

உண்ணவோர் பருக்கைகள் உதவுவார் இல்லை
உடுக்கவோர் புடவைகள் இடையிலும் இல்லை
மண்ணிலே என்குலம் மடிந்திடும் தொல்லை
மானமண் அழிவதோ வாழ்க்கையின் எல்லை..
-வெண்பனிப்

குண்டுகள் தலைக்குமேல் கொட்டுதே அம்மா
குலமெலாம் வதைக்குகை முட்டுதே அம்மா
தெண்டிரை யாமெழும் தேசத்தின் வாசலில்
திரும்பவும் வருமோ இருப்பிடும் நேசமே!. -வெண்பனிப்

(15)

# குண்டில் எரிந்தது தேசம்!

குண்டில் எரிந்தது தேசம்-தமிழ்
மண்ணே கருகிய கோலம்!

காயும் சிதறுது கனியும் சிதறுது
காற்றும் சிதறுது காணாய்-அட
தாயும் சிதறுது தந்தை சிதறுது
தளிரும் சிதறுது பாராய்!

குண்டில் எரிந்தது தேசம்-தமிழ்
மண்ணே கருகிய கோலம்!

குழியின் மத்தியில் குந்தி இருந்தவன்
குண்டு வெடியிலே இறந்தான்-வந்த
வழியின் தெருக்களில் வாழ்ந்த குடும்பமே
வகைதொகை இன்றியே முடிந்தார்!

குண்டில் எரிந்தது தேசம்-தமிழ்
மண்ணே கருகிய கோலம்!

நல்லூர் தேரிலே நடந்த மக்களாய்
நாலா பக்கமும் நடந்தார்-அந்தக்
கூட்டம் பார்த்துமே குண்டு கொட்டிட
கூட்டம் கூட்டமாய் மடிந்தார்!

குண்டில் எரிந்தது தேசம்-தமிழ்
மண்ணே கருகிய கோலம்!

இந்திய நாட்டுடன் இணைந்த நாடுகள்
எடுத்த நெருப்பிது அல்லவா? எங்கள்
சொந்தப் பிறப்புகள் செத்து மடிவதா?
தேசத்தில் மானிடம் இல்லையா?

குண்டில் எரிந்தது தேசம்-தமிழ்
மண்ணே கருகிய கோலம்!

(16)

# என்றும் நீயொரு தமிழன்!

## எடுப்பு

தில்லியில் வாழலாம் நல்லையில் வாழலாம்
தேசம் எங்கிலும் நீ வாழலாம்-அட -தில்லியில்

## தொடுப்பு

எல்லை கடந்துமே எங்குநீ வாழினும்
இருப்பாய் தமிழா உயிர்ப்பாய் உணர்வாய்... -தில்லியில்

## முடிப்பு

பிஷியாம் தீவிலே மலேசி யத்திலே
பினாங்கு சிங்கப் பூரிலே-அர்த்த
நிசியில் பகலாம் நோர்வே டென்மார்க்
நியூசிலண்ட் பர்மா ஊரிலே.....அந்தத் -தில்லியில்..

கனடாத் தேசத்தில் கனியமெ ரிக்கவில்
இனமே தமிழென இருப்பாய்! -அட
மனதைத் திறந்துநீ தமிழனென் றுரைப்பாய்!
வைத்திடு பெயரைத் தமிழடை யாளமாய்! -தில்லியி

பிரித்தா னியாவில் ஐரோப்பா மண்ணில்
உரித்தானாய் எங்கும் தமிழா-எங்கு
வரிப்பினும் நீயோர் வணங்கிடும் இனமாய்
வரலாறு எழுதடா தமிழா! ..அந்தத் -தில்லியில்

பெற்ற நிலத்திடைப் பிறப்பில் தமிழினம்
பூமிப் பந்தில் ஒன்றா(க்)கும்-அந்த
வலிமை உலகிலே வகுக்கும் கனமதே
வண்ணத் தமிழனின் இருப்பாக்கும்..அட -தில்லியில்

(33)

## என்றன் நெருப்பு என்நிலத்தின் துடிப்பு!

எரியும் உடலில் விரியும் நெருப்பு
இனத்தின் துயரது தோழா!
புரியும் மொழியில் புகன்றும் தெரியார்
பூமியின் கொடியரே தோழா!

சிதறும் சனத்தை பதறும் மழலை
தெரியா திருக்குதே உலகம்!
கதறும் தமிழர் கருகித் துடிக்கக்
காணா திருக்குதே மனிதம்!

அயினா மருங்கில் எரிந்தேன் அதுதான்
அன்னைமண் எரிந்திடும் நெருப்பு
குயில்கள் பாடும் குலத்தெழில் மண்ணை
கொன்று புதைத்திடும் பதைப்பு!

அறிவாய் மனிதா அகிலப் பொறியாய்
அலறும் தமிழரைப் பாராய்!
நெறியாய் உலகே நீயிருந்தா யெனின்
நிசத்தை உலுப்பியே வாராய்!

ஆண்ட பரம்பரை அழித்தவன் நீயதால்
அரங்கே உன்னகம் நானெரிந்தேன்!
நீண்டது எம்வதை நீதியே நீசொலாய்
நெடுந்தீ வளர்த்துமே நான்மலர்ந்தேன்!

**(ஒரு உயிர்க்கொடையாளியின் வாசகம்)**

(34)

# மழை

(அன்னைநிலத்தில் அழியா நாட்கள்-சிறுவர் மொழி)

மின்னல் மின்னி இடியிடித்து
மேகக் கூட்டம் பரவுது
இன்னல் எல்லாம் போகமழை
எங்கும் பெய்யப் போகுது.

மழையின் தூறல் கண்டுதோகை
மயிலும் நடம் ஆடுது
கிளையில் தாவி குரங்குப்பிள்ள
கிடுகிடுன்னு ஓடுது!

ஆடும் கிளையில் பாடும்குயிலும்
அழுகைக் கானம் இசைக்குது
போடும் கூச்சல் வீசிவீசி
புயலும் காற்றும் அசைக்குது!

கோட்டான் நாரை மீனையள்ளிக்
கொள்ள நேரம் பார்க்குது
வேட்டை யாட வந்தநரியும்
வேருக் குள்ளே பதுங்குது

தொப்பி போல நீர்க்குமிழி
தோன்றித் தோன்றி மறையுது
கப்பல் விட வாடாவென்ற
கண்ணன் சத்தம் கேட்குது!

(35)

# தெய்வமெலாம் பாடிநின்றேன்.. திரும்பிப் பாருங்கள்..

## பல்லவி

தெய்வமெலாம் பாடிநின்றேன் திரும்பிப் பாருங்கள்!-எங்கள்
மெய்த்தமிழின் உயிர்நிலத்தில் விரும்பி வாருங்கள்!
-தெய்வமெலாம்

## அனுபல்லவி

பொய்யுமிழும் தீயில்வெந்த பூமி அடைந்தோம்-சொந்தப்
பொன்கொழிக்கும் தாயர்நிலம் புகையில் அளந்தோம்!
-தெய்வமெலாம்

## சரணம்

நீருயர நெல்லுயரும் நிலத்தில் நின்று-எங்கள்
நிசத்தமிழை தினமுரைக்கும் காலம்வருமா?
தீர்வெழுந்து சமுதாயத் தெருவில் நின்று-முந்தைத்
தீந்தமிழிற் பாடல்வைத்த சீலம் வருமா?
-தெய்வமெலாம்

தூரிகையில் பாப்புனைந்த காதல் வருமா-அம்மன்
தேவியர்கள் கோவில்செய்த கோலம் வருமா?
ஊரிலொரு விழாவெடுத்த ஒழுக்கம் வருமா?-அன்பு
உத்தமர்கள் வாழ்ந்தபண்பு இனியும் வருமா?
-தெய்வமெலாம்

(36)

# தமிழே இசையைத் தான்தாங்கு!

### எடுப்பு

தங்கத் தமிழே எனைத்தாங்கு-நீ
தானே இசையின் உயிர்ப்பாங்கு -தங்கத்

### தொடுப்பு

பொங்கிப் பொழியும் மொழியின் வெள்ளம்
பூக்கும் புலவர் ஏந்தும் உள்ளம் -தங்கத்

### முடிப்பு

எங்கும் எதிலும் உணர்வின் சிதறல்-தமிழ்
இசைகள் ஆர்க்கும் மணியின் கதிர்கள்
பொங்கும் தமிழிற் பூக்கும் அருவி-இசைப்
புயலாய் மருவும் புதுமைப் புரவி -தங்கத்

ஆசைக் கருக்கள் தேசக் குயில்கள்-பண்
ஆகிக் களித்து ஆடும் மயில்கள்
ஈசன் பாதம் இசையின் கீதம்-இந்த
இரண்டும் இணைக்கும் மொழியின் நாதம் -தங்கத்

(37)

## ஓ..தமிழவளே..!

மானா மதுரைத் தமிழவளே
வைகைத் தென்றல் இனியவளே
வானம் வளரும் முழுமதியே
வாராய் ஈழ வைகறையே -மானா

கானிற் பூத்த நிலப்பூக்கள்
கன்னல் மொழியின் நிறப்பூக்கள்
ஏனைச் சிந்தே தாலாட்டே
என்னை வரிக்கும் தமிழூற்றே! -மானா

வேரிற் பழுத்த பலாப்பழமே
வேலன் கோவில் விடிவிளக்கே!
தேரில் உலவும் திருமகளே
தீந்தமிழ் பொதிகைத் திரவியமே! -மானா

காரிற் பூத்த கனமழையே
கால்கள் அளந்த கலையழகே!
நாரி ஒடியும் நூலிழையே
நந்தா விளக்கே நறுமிசையே! -மானா

கம்பன் போற்றக் கனிந்தவளே
கன்னற் புலவர்க் கவிமகளே!
என்றும் புதுமை ஏற்பவளே!
ஈர்ப்பாய் புதிய பாரதியே! -மானா

# (38)

# நம்நாடு!

### பல்லவி

நாளை வருகுதடா நம்நாடு-ஈழ
நாடு இசைக்குதடா தெம்மாங்கு -நாளை

### அனுபல்லவி

சூழும் துயர்க்காடு தீர்ந்து மகிழ்வோடு
வாழும் தமிழோடு வாரும் இசையோடு -நாளை

### சரணம்

எங்கள் நிலத்துயரம் இனியோடும்-புவி
எங்கும் தமிழ்மலர்ந்து எழில்காணும்!
துங்கமணி மாளிகையில் கீதம்வரும்!-தமிழ்த்
தேவியவள் பாடுகின்ற பாடல்வரும் -நாளை

பாயும் பெரும்புலவர் பவனிசெய்வார்-தமிழ்
பனுவல் மருவுமிசைப் பாடல்செய்வார்!
தாயின் தமிழமுதம் தானுரைப்பார்-அன்பு
ததும்பும் வாருரையிற் தரணிசெய்வார்! -நாளை

## (39)

# உயிர்நிலத்தைக் காத்திடுவாய்!

வேரிழந்தோம் பேரிழந்தோம்
வீடுமனைத் தேரிழந்தோம்
ஊரிழந்தோம் உறவிழந்தோம்
ஊர்ந்தநில வாழ்விழந்தோம்! -வேரிழந்தோம்

காரெறிந்த வயற்காட்டுக்
காற்றையும் நாமிழந்தோம்!
மாரிமழை ஏருழவின்
வயல்வெளியை நாம்மறந்தோம்! -வேரிழந்தோம்

மேலாடை இழந்துவிட்ட
மேபிள்மரப் பனிமழையில்
நூலாடைக் குஞ்சுகளின்
நிசவாழ்வைத் தேடுகிறோம்! -வேரிழந்தோம்

கண்ணயர்ந்த தேசத்திலே
கவலைதரும் காட்சிகளால்
விண்ணிறைந்து போச்சுதம்மா!
வீழ்ந்தநிலம் ஆச்சுதம்மா! -வேரிழந்தோம்

கட்டுக்குலை யாதமண்ணின்
கற்புச்சிலை பதைக்குதம்மா!
ஒட்டுக்குடி வாழ்வாக
உருமாறிப் போனதம்மா! -வேரிழந்தோம்

பிணம்தின்னும் சாத்திரங்கள்
பொழுதொரு கொலைவாழ்க்கை!
குணம்மாறும் மாந்தர்களின்
கூத்தலையில் மலைக்குதடா! -வேரிழந்தோம்

தமிழாநீ விழித்தெழுவாய்!
தங்கமண்ணைப் பார்த்தழுவாய்!
உமிழாகப் போகுமுன்னே
உயிர்நிலத்தைக் காத்திடுவாய்! -வேரிழந்தோம்

# (40)

## ஓ... தமிழா!

ஆயிரமாய் ஆயிரமாய்
அழிவாகி விழுந்தபின்னும்
தாயிரங்காப் பிள்ளையெனத்
தமிழர்மண் மாறுவதோ!

போதையில் கிடந்துழலப்
புலம்புகின்ற குடிமகனான்
பாதையில் கிடப்பதனைப்
பார்த்துலகம் சிரிக்குதடா!

ஆய்பாடி நிலமெல்லாம்
அலங்கோல மாச்சுதடா!
பேய்பாடிக் கூத்துஇடும்
பொட்டல்வெளி ஆச்சுதடா!

நீதிக்குப் பெயர்போன
நிலத்தழகுப் பரிமாணம்
பேதிக்கழி வானதுவாய்ப்
போனகதை வருகுதடா!

பிள்ளையைத் தெரியாத
பெற்றதந்தை பார்க்கின்றோம்!
தள்ளிமனை யாளைஎரித்
தழிப்பதனைப் பார்க்கின்றோம்!

போதைப்பொருள் பாதையிலே
பெருங்காசு விற்குதடா!
வாதைதெரி யாதுசிக்கி
வண்ணநிலம் மடியுதடா!

நீயுனையே மாற்றாவிட்டால்
நெடுந்தீ அழிக்குமப்பா!
பாயிலும் பாம்பிருக்கும்
பதைவாழ்வில் துடிக்குமப்பா!

(தீந்தமிழ் நாற்பது முற்றிற்று)

தீவகம் வே. இராசலிங்கம் அவர்களின்

## நூல்கள்

1) நிலப்பூக்கள்


2) பள்ளம்புலம் குமரக்கோட்டம் திருமுருகன் பிள்ளைத்தமிழ்

3) பள்ளம்புலம் திருமுருகன் துவாதச(பன்னிரண்டு வகை)ப் பாமாலை

4) தெய்வமும் தீந்தமிழும் (தெய்வம் நாற்பது-தீந்தமிழ் நாற்பது அடங்கிய கீர்த்தனைப் பாக்கள்)

5) அய்யனார் அருட்பாமாலை! (சரவணை கிழக்கு, மயிலப்புலம் திருப்பொலி ஐயனார் அருட்பாமாலை)

6) வேவியூ பெரியபிள்ளையார் ஊஞ்சற்பா-இசைப்பா!



பலவிதத்தில் வெளிப்பாடுகளை
எழுத்தில் கொண்டு வருகின்ற கவிஞர்
புதியபாரதி, தீவகம் வே. இராசலிங்கம்
அவர்கள்.

விறுவிறுப்பாகக் கவிதை வரைகின்ற
ஒரு உணர்வுக் கவிஞர் அவர்.

ஈழத் தமிழகத்தில் பல வருடங்களுக்கு முன்னர்
வெளிவந்த தாய்நாடு பத்திரிகையில்
தனது முதலாவது கவிதையை
வெளிக்கொணர்ந்தார்.

ஈழநாடு, சுதந்திரன் முதலிய பத்திரிகைகளில்
எழுபதுகளில் இவரின் பல கவிதைகள் பிரசுரமாகின.
ஈழத்திலும், கனடாவிலுமாக கவியரங்கங்களில்
பங்குபற்றிப் பெருமை பெற்றார்.

நிலத்தில் பரிணமித்த தெய்வங்களின் மீதும்
தீந்தமிழ் மீதும் எழுதப்பட்ட இந்தக்
கீர்த்தனைகள் காலத்தால் அழியாது
நிலைத்து நிற்கும் என்பதற்கு
ஐயமில்லை.

படித்து இன்புறுங்கள்.

**சிந்தனைப் பூக்கள் எஸ். பத்மநாதன்**
**கனடா**

62000
9780992148102

நூலமைப்பு: பாரதி பதிப்பகம்

அச்சகம்: ஜேஜே பிறின்ரேர்ஸ்-கனடா-416-298-9322